தமிழ் நாடு சட்ட மன்ற மேலவை

செவ்வாய்க்கிழமை, 1974 சனவரி 22.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில் பிற்பகல் 4 மணி அளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (திரு. சி. பி. சிற்றரசு) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Aid from the 'UNICEF'.

*26 *Q*.—THIRU L. BALARAMAN: Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) wheher any Hospitals and Primary Health Centres in our State receive 'UNICEF' aid from the United States;

(*b*) if so, the nature of aid; and

(*c*) the annual amount of the aid?

'யுனிசெப்' நிறுவனத்திடமிருந்து உதவி

திரு. எல். பலராமன்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நம் மாநிலத்திலுள்ள மருத்துவமனைகள், ஆரம்பச் சுகாதார நிலையங்கள் எவையேனும் அமெரிக்காவிலிருந்து UNICEF உதவி பெறுகின்றனவா?

(இ) ஆமெனில் எந்த வகையில்?

(உ) ஆண்டொன்றுக்கு எவ்வளவு தொகை பெறுகின்றன?

மாண்புமிகு திரு. க. அன்பழகன்: (அ), (இ) & (உ) விவர அறிக்கை @ ஒன்று அவை முன் வைக்கப்பட்டுள்ளது.

@ 80–90 ஆம் பக்கங்களில் இணைப்பு I ஆக அச்சிடப்பட்டுள்ளது.

திரு. எல். பலராமன் : மாண்புமிகு தலைவரவர்களே, இத்தகைய உதவிகள் மத்திய அரசின் மூலமாக நமக்குக் கிடைக்கின்றனவா அல்லது யுனிசெஃப் மூலமாக நேரடியாகவே மாநில அரசுக்குக் கிடைக்கின்றனவா? இப்போது பி. எல். 480 நிறுவனத்தின் மூலமாக சில பொருள்களை வினியோகம் செய்கின்றார்கள் என்று இருக்கின்றது. அவையும் இதில் சேர்க்கப்பட்டிருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. அன்பழகன் மாண்புமிகு தலைவரவர்களே, யுனிசெஃப் ஸ்தாபனத்தின் ஒத்துழைப்பு இந்தியாவிலுள்ள எல்லா மாநிலங்களிலும் பரவலாக, மருத்துவ நலத் துறை, நோய்த் தடுப்புத் துறை, குழந்தைகள் நல்வாழ்வு ஆகியவற்றுக்காக மாநிலங்களிலே, சிறப்பாக கிராமப்புற மக்களுக்கு உதவும் வகையில் அமைந்திருக்கின்றது. இந்திய அரசு ஏற்றுக் கொண்ட ஒரு உடன்பாட்டின் அடிப்படையில் அல்லது ஒத்துழைப்பைப் பெற்று, அவ்வப்பொழுது, உள்ள நிலைமைகளுக்கு ஏற்ப மருந்துகள், கருவிகள் எல்லாம் வழங்கப்படுகின்றன என்று தெரிவித்துக்கொள்ளுகிறேன்.

Radio-Diagnostic and Radio-therapy Equipments

* 27 *Q*.—THIRU G. SWAMINATHAN : Will the Hon. the Minister for Health be pleased to state—

(*a*) whether there is a Committee to advise the Health Department towards the purchase of Radio-Diagnostic and Radio-therapy equipments; and

(*b*) if so, the names of the members of the Committee?

நோயறியும் கதிரியக்க (Radio Diagnostic) **சாதனம், கதிரியக்க முறையில் சிகிச்சையளிக்க உதவும்** (Radio Therapy Equipments) **சாதனங்கள்.**

திரு. ஜி. சுவாமிநாதன் : மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினுக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நோயறியும் கதிரியக்க (Radio Diagnostic) சாதனம், கதிரியக்க முறையில் சிகிச்சையளிக்க உதவும் (Radio Therapy Equipments) சாதனங்கள் ஆகியவற்றை வாங்குவதற்காக சுகாதாரத்துறைக்கு ஆலோசனை கூறுவதற்குக் குழுவொன்று உள்ளதா?

(இ) ஆமெனில், அக்குழுவின் உறுப்பினர்கள் யார்—யார்?